ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1818/16 - 2013 ජූලි මස 10 වැනි බදාදා - 2013.07.10

*1818/16 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்*

57 ஆம் பிரிவின் இன் கீழான கட்டளை

*மின்வலு, சக்தி அமைச்சர் பவித்ரா வண்ணியாராச்சி ஆகிய நான், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இலங்கை மின்சார சபைக்குத் தேவைப்படுவதும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான காணியின் உத்தேசிக்கப்பட்டுள்ள சுவீகரிப்புக்கு இவ்வாணையின் மூலம் அங்கீகாரம் வழங்குகின்றேன்.*

பவித்ரா வண்ணியாராச்சி,
மின்வலு, சக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2013, யூலை 04.*

**அட்டவணை**

இலங்கைத் தீவின் மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஒயபளாத கோரளை சிறு பிரிவிலுள்ள, 475/E தலவாக்கலை கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ளதும் 0ஏ. 0றூ. 39.30 பே. பரப்பளவைக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.ஆர். பிரசன்ன அல்விஸ் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2011, யூலை 20 ஆந் திகதி கொண்ட யுகேஎச்பி/ஏஆர்பி/010 இலக்கமுடைய நில அளவைப் படத்தில் காட்டப்பட்டுள்ளதும் துண்டு இலக்கம் 1 ஐக் கொண்டுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான காணி :

*1.* **துண்டு இல. 1 தலவாக்கலை தோட்டம், வீட்டுத்தோட்டம் - விஸ்தீரணம் 39.30 பேர்ச்சஸ்.**

வடக்கு: தலவாக்கலை தோட்டம் ;
கிழக்கு: தலவாக்கலை தோட்டம் ;
தெற்கு: இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான காணி;
மேற்கு: புகையிரத ஒதுக்குப்பகுதி.

*உரிமை கோருபவர் :* உரிமை கோருபவர்களின் பெயர் பட்டியல், இணைக்கப்பட்டுள்ள யுகேஎச்பி/ஏஆர்பி/010 முன் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி.

07-755